**சுருக்கம்**

அறிவிப்புகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2022-23-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - சமூகப் பொறுப்புடன் செயல்படும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 2022 ஆம் ஆண்டு முதல் விருதுகள் வழங்குதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை**

அரசாணை (நிலை) எண்.80 நாள் 06.07.2022.

சுபகிருது, ஆனி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2053.

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.2) துறை, நாள் 02.07.2007.
2. மாண்புமிகு அமைச்சர், ஊரக வளர்ச்சித் துறை அவர்களின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையின் (07.04.2022) போது சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் எண் – 17.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 23813/2022/பரா.3.3, நாள் 01.05.2022.

*****

**ஆணை:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2022-23-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை நடைபெற்ற 07.04.2022 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

**"தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வுடன், பாராட்டத்தக்க வகையில், சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து, சிறப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கு ஒரு விருது வீதம் 37 மாவட்டங்களிலும் சிறப்பாகப் பணி செய்த, தலைசிறந்த**

**தொழில் மற்றும் வணிக நிறுவனத்திற்கு விருது வழங்கப்படும். இந்த விருது, ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் கொண்டதாகும்.”**

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கருத்துருவில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, இடைப்பட்ட காலத்தில் இவ்விருது வழங்கப்படாத நிலையில், மீண்டும் இவ்வாண்டு முதல் வழங்கிடும் பொருட்டு, மேற்காணும் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், சமூகப் பொறுப்புணர்வுடன் பாராட்டத்தக்க வகையில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விருது வழங்கிடும் பொருட்டு அரசாணை வெளியிடுமாறும், உடன் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் அனுமதித்து அரசாணை வெளியிடுமாறும் அரசினைக் கோரியுள்ளார். மேலும், விருது விவரம் மற்றும் நிதி செலவினம் குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

**விருது விவரம் :**

இவ்வாண்டு முதல் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 37 விருதுகள் சமூக பொறுப்புணர்வுடன் பாரட்டத்தக்க வகையில் செயல்படும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும். தேர்வு செய்யப்பட்ட தொழில் மற்றும் வணிக நிறுவனம் ஒன்றுக்கு, ஒரு விருதும், ரூ. 1 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படும். இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

**நிதி :**

சமூகப் பொறுப்புணர்வுடன் பாராட்டத்தக்க வகையில் செயல்படும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ள இவ்விருது மாநில அரசின் விருதாக உள்ளதால், இதற்கான செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நிறுவனத்துக்கு விருது வழங்கப்படவுள்ளதால் மொத்தம் 37 நிறுவனங்கள் மாநில அளவில் தேர்வு செய்யப்பட உள்ளன. ஒரு நிறுவனத்துக்கு ரூ.1 இலட்சம் வழங்க உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், இதற்கான மொத்த நிதி ஒதுக்கீடாக ரூ.37 இலட்சம் தேவைப்படுகிறது என்றும், விருதுக்கான கேடயம் வழங்குதல், சான்றிதழ் தயாரித்தல், நாளிதழ்களில் விளம்பரம் செய்தல், போக்குவரத்து உள்ளிட்ட இதர நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக செலவினமாக ஆண்டிற்கு ரூபாய் 5 இலட்சம் கூடுதலாக அனுமதித்து ஆக மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.42 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுமாறும், இது மாநில

அரசால் வழங்கப்படும் விருது என்பதால் இதனை மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி, ஒரு நிறுவனத்துக்கு ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் 37 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நிறுவனம் வீதம் 37 நிறுவனங்களுக்கு நிர்வாக செலவினங்கள் உட்பட, 2022-ஆம் ஆண்டு முதல் சமூகப் பொறுப்புணர்வுடன் பாராட்டத்தக்க வகையில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விருது வழங்க ரூ.42,00,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்விருது வழங்குவதற்கு தேர்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கான தகுதிகள், தேர்வுமுறை மற்றும் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையில் இணைப்பில் உள்ளது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| கணக்குத் தலைப்பு | தொகை (ரூபாயில்) |
|---|---|
| 2515-00-ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102- சமுதாய மேம்பாடு – மாநிலச் செலவினங்கள்- KJ- முன் மாதிரி கிராம விருது – 309- உதவித் தொகை – 03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>(IFHRMS த.தொ.கு: 2515 00 102 KJ 30903) | 42,00,000/- |

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.42,00,000/- 2022-2023-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகின்றது. இதுகுறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும். 2022-2023-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும்,

இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி (வரவு செலவு பொது-1/ஊ.வ.)த் துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.33510/நிதி(ஊ.வ)/2022, நாள் 06.07.2022-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.0595 (ஐந்நூற்று தொண்ணூற்று ஐந்து) (IFHRMS ASL No. 2022070595).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
கூடுதல் தலைமைச் செயலாளர் /
தலைமை இயக்குநர் (பயிற்சி), சென்னை 15.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி
நிறுவனம், மறைமலைநகர், செங்கல்பட்டு.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்.

**நகல்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின்
முதுநிலை உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை
அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (ஊ.வ/வ.செ.பொ.1/2/வ.வ.1) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

6/7/2022

## இணைப்பு

## வழிகாட்டு நெறிமுறைகள்

### I. தகுதிகள்

i. அனைத்து தொழில் / சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அவை பொதுத்துறை / தனியார், கூட்டுத் துறை நிறுவனங்களாக இருந்தாலும் இவ்விருது பெற தகுதி உடையவை ஆகும்.

ii. அந்நிறுவனங்கள், பங்கு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்களாகவும் இருக்கலாம்.

iii. தொழில் / சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்புகளும் இவ்விருது பெறத் தகுதி உடையவை ஆகும்.

iv. மேற்படி நிறுவனங்கள் நேரடியாகவோ, அறக்கட்டளைகள் மூலமாகவோ, தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ, இதர முகமைகள் மூலமாகவோ செயலாற்றலாம்.

v. தனித்துவமான அறக்கட்டளைகள் / தொண்டு நிறுவனங்கள் மற்றும் மன்றங்கள் / சங்கங்கள் இவ்விருது பெற தகுதியற்றவை ஆகும்.

### II. பரிசீலனைக்கான கூறுகள்

i. ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளே விருது வழங்க எடுத்துக் கொள்ளப்படும்.

ii. விவசாயம், கால்நடை, கல்வி, பொதுச் சுகாதாரம், குடிநீர், மழைநீர் சேகரிப்பு, மரபு சாரா எரிசக்தி, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், சுய உதவிக்குழுக்கள் (ம) வாழ்வாதார மேம்பாடு, பெண்கள், குழந்தைகள், இளைஞர் நலன், மரக்கன்றுகள் நடுதல் ஆகிய சேவைகளில் சிறப்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் விருதுக்கு பரிசீலிக்கப்படும். மேலும் பல்வேறு சமூகநல மேம்பாட்டுப் பணிகளும் விருது வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும்.

iii. அந்தந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பணிகள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

iv. நிறுவனங்களின் கடந்த ஒரு நிதி ஆண்டின் செயல்பாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

## III. தேர்வு முறை

i. இவ்விருதுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கருத்துருக்கள் கோரி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு தொழில் வர்த்தக மற்றும் சேவை நிறுவனங்களுக்குக் கடித வாயிலாகவும், பத்திரிகை செய்தி மூலமாகவும் அறிவிப்பு வெளியிடப்படும்.

ii. மேலும், இவ்விருதுக்கான கருத்துரு தொடர்பான விளம்பரம் தமிழக அரசின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, 45 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும்.

iii. விண்ணப்பங்கள் மேற்குறிப்பிட்ட இணையதள வழி மட்டுமே உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. இணைய வழியில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் சிறந்த சமூக சேவகர் ஒருவரையும் கொண்ட தேர்வுக்குழு தகுதியுள்ள ஐந்து நிறுவனங்களை தேர்வு செய்யும்.

v. தேர்வு செய்யப்பட்ட ஐந்து நிறுவனங்களை களத்தில் சரி பார்க்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஏற்பாடு செய்வார். கருத்துருக்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் / விவரங்களுடன் உண்மை நிலையில் ஏதேனும் பெருத்த வேறுபாடுகள் காணப்பட்டால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

vi. அதன் பின் மாநில தேர்வுக்குழுவால் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவகர் ஆகியோரைக் கொண்ட குழு) மேற்கண்ட ஐந்து நிறுவனங்களிலிருந்து இரண்டு நிறுவனத்தை தேர்வு செய்து இறுதி முடிவெடுக்க அரசுக்கு அனுப்பி வைக்கும்.

vii. மேற்கண்ட தேர்வுக்குழு பரிந்துரைக்கும் பட்டியலிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கான ஒரு நிறுவனத்தை அரசு இறுதியாக தேர்வு செய்யும்.

## IV. இதர நிபந்தனைகள்

i. இவ்விருது பெற்ற ஒரு நிறுவனம் அடுத்த மூன்றாண்டுகளுக்கு விருது பெற அந்த மாவட்டத்திற்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ii. குறிப்பிட்ட ஆண்டில் விருது பெற தகுதிபெறாத நிறுவனங்களின் பெயர் அடுத்துவரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்பட தடையில்லை.

V. விருதுத் தொகை

i. அரசினால் இறுதியாக தேர்வு செய்யப்பட்ட மாவட்டத்திற்கு ஒரு நிறுவனத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் விருதுத் தொகையாக வழங்கப்படும். இத்தொகை மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்கான அரசு நிதித் தலைப்பு புதிதாக ஒன்று உருவாக்கப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலம் உரிய நிதி பெறப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

ii. இவ்விருது தொகையுடன் நற்சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
6/7/2022